நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 90/2021**

**P.W. 1 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | தேவகி |
| தந்தை / கணவர் பெயர் | : | தங்கவேல் |
| கிராமம் | : | நங்கவள்ளி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 80 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுலை மாதம், 03–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.46PM.)

1. நான் தற்போது முனியப்பன் கோவில் காட்டு வளவில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எங்களுக்கும் எதிரிகளுக்கும் நிலம் சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருகிறது. நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு காலை 9.00 மணி அளவில் நான் வீட்டில்

இருந்தேன். என்னுடைய வீடும் எதிரிகள் மரம் வெட்டிய இடமும் அருகருகே உள்ளது.

2. எதிரிகள் மூன்று பேரும் எங்களுக்கு சொந்மான மரத்தை வெட்டினார்கள். எதிரி கவிராஜ் என்னுடைய முதுகில் கையால் குத்தினார். எதிரி யுவராஜ் கயைால் என்னுடைய கண்ணத்திலும் தலையிலும் அடித்தார். எதிரி பொன்னுசாமி கொடுவாளால் இடது கை ஆள்காட்டி விரலில் வெட்டினார். எதிரி பொன்னுசாமி மனைவி சீதா எவ்வளவு ஆனாலும் பரவாயில்லை என்னை போட்டு தள்ள சொன்னார். எதிரி பொன்னுசாமி என்னை என்றைக்காக இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்.

3. அங்கு வந்த எனது பேரன் பிரகாசை எதிரிகள் குத்தினார்கள். எனது கணவர் தங்கவேலை எதிரிகள் மூன்று பேரும் அடித்தார்கள். காயம் பட்ட எங்களை செங்கோடன் மேட்டுர் அரசு மருத்துவனைக்கு அழைத்து சென்று சிகிச்சையில் சேர்த்தார். மருத்துவமனையில் நான் இருந்தபோது போலீசார் வந்து என்னை விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான்.( புகார் வாக்குமூலம் அ.சா ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) ஆஜர் எதிரி பெயர் பொன்னுசாமி மற்ற இரண்டு எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவத்தன்று நான் மருத்துவமனைக்கு வந்த உடனே போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள். அப்போது காலை 9 மணி இருக்கும். அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். என்னை விசாரிக்கும் போது என்னுடைய பேரன் பிரகாசையும் போலீசார் விசாரித்தார்கள். என் பேரனிடம் விசாரித்து கையெழுத்து வாங்கினார்களா என்று எனக்கு தெரியாது.

2. போலீசார் என்னை விசாரிக்கும் போது எனக்கு இடது கையில் ஏற்பட்ட காயத்தை காட்டினேன். எனக்கு முதுகிலும் தலையிலும் வீங்கி இருந்ததா

என்றால் ஆமாம் வீங்கி இருந்தது. மருத்துவரிடம் மேற்படி வீங்கி இருந்ததை காட்டித்தான் ஊசி போட்டேன். ஏற்கனவே நானும் எனது கணவரும் பொன்னுச்சாமி காட்டில் மரங்களை வெட்டியதாக எதிரிகள் புகார் கொடுத்து நங்கவள்ளி காவல் நிலையத்தில் எங்களை விசாரித்தார்கள் என்றால் சரிதான். நாங்கள் மரங்களை வெட்டவில்லை.

3. எதிரி பொன்னுசாமி எங்கள் மீது 11.01.2021, 23.10.2022 ஆகிய தேதியில் மரம் வெட்டியதாக எங்கள் மீது புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். இந்த புகாரின் பேரில் நங்கவள்ளி காவல் நிலையத்தில் எங்களை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். அப்போது மரம் வெட்ட மாட்டோம் என்றும் வழக்கில் முடிவு தெரிந்த பிறகு தான் எதுவும் செய்வோம் என்று எழுதிக் கொடுத்துவிட்டு வந்தோம் என்றால் சரிதான். அதன்படி நாங்கள் நடந்து கொள்ளாமல் மீண்டும் நானும் எனது கணவரும் மரங்களை வெட்டியதால் தான் இந்த பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியில்ல நாங்கள் எங்களது காட்டில் உள்ள மரங்களைத்தான் வெட்டினோம்.

4. நாங்கள் மேற்கண்டவாறு மரம் வெட்டிக் கொண்டிருந்தபோது அதை பொன்னுச்சாமி கேட்டதால் நானும் எனது கணவர் பேரன் ஆகியோர் இணைந்து பொன்னுச்சாமி அடித்து விட்டு அதிலிருந்து தப்பிக்க வேண்டி பொன்னுச்சாமி வகையறாக்கள் எங்களை தாக்கியதாக பொய் புகார் அளித்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியில்ல. நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது பொன்னுச்சாமியும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக சொன்னார்கள். அவர்கள் கொடுத்த புகாரின் பேரில் எங்கள் மீது வழக்கு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. உண்மையில் நாங்கள் தான் வழக்கு நிலுவையில் இருப்பதை கருத்தில் கொள்ளாமல் மரங்களை வெட்டினோம் என்றால் சரியல்ல.

5. சம்பவத்தின் போது சுமார் பத்து பேர் வந்து மரங்களை வெட்ட வந்தார்கள். அதில் மூன்று நபர்கள் தான் மரங்களை வெட்டினார்கள். அந்த மூன்று நபர்கள் இந்த வழக்கின் எதிரிகள் மூன்று பேர்கள் ஆகும். பொன்னுச்சாமியின் மனைவியும் அந்த இடத்தில் இருந்தார். நானும் எனது கணவர்தான் போய் தடுத்தோம். எங்களை அடிக்கும் போது தான் எங்களது பேரன் வந்தார். பத்து பேரும் பார்த்துக்

கொண்டுதான் இருந்தார்கள். எதிரிகள் மூவரும் தான் எங்களை அடித்தார்கள்.

6. எனது கணவரை கீழே தள்ளி தடியால் தான் அடித்தார்கள் கொடுவாளால் வெட்டவில்லை. என்னை யாரும் தடியில் அடிக்கவில்லை கையால்தான் அடித்தார்கள். எனது பேரனை அவரது கையில் கொடுவாளால் சீவி விட்டார்கள். பொன்னுசாமி தான் அதை செய்தார். மேற்படி தாக்கப்பட்டதில் எனது பேரனுக்கு இடது கை ஆள்காட்டி விரலில் ரத்தம் காயம் ஏற்பட்டது.

7. எனது கணவரை அங்கேயே விட்டுவிட்டு நானும் எனது பேரனும் எனது மகனும் மருத்துவமனைக்கு வந்தோம். எனது மகன் செங்கோடனுக்கு அடிபடவில்லை. அந்த சமயத்தில் அவர் அங்கு வரவில்லை. மருத்துவமனையில் நானும் எனது காரணம் தான் வைத்தியம் எடுத்துக் கொண்டோம். எனது பேரன் சிகிச்சை பெற்று விட்டு வீட்டுக்கு சென்று விட்டார். அப்போது கொரோனா பரவி இருந்த காலம்.

8. போலீசார் விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தை எனக்கு படித்துக் காட்டவில்லை. கையெழுத்து மட்டும்தான் வாங்கிக் கொண்டார்கள். நான் சொன்னவாறு சம்பவம் நடக்கவில்லை என்றாலும் நாங்கள் தான் மரங்களை வெட்டினோம் என்றாலும் தடுக்க வந்த எதிரிகளை தாக்கிவிட்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் எங்களை தாக்கியதாக பொய் புகார் அளித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.19PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**